ஜே.ஆர். ஜயவர்தன வரலாற்று ஆய்வு, காப்பக மற்றும் நூலக நிலையத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1988 இன் 77 ஆம் இலக்க ஜே.ஆர். ஜயவர்தன நிலையச் சட்டத்தின் 7(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிலையத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, ஜே.ஆர். ஜயவர்தன வரலாற்று ஆய்வு, காப்பக மற்றும் நூலக நிலையத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**

காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு தாக்கத்தை ஏற்படுத்தாத முன்னைய ஆண்டிற்கான இருப்பு சீராக்கல்கள் ரூபா 3,212,560 தொகை காசு உள்பாய்ச்சல் என காட்டப்பட்டுள்ளது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

(i) காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி வெவ்வோறாக பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டுமெனவும், அவ்வாறு செய்திருக்காததுடன் காணிகள் தொடர்பாக 5 சதவீதம் பெறுமானத்தேய்வு ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ii) நூதனசாலையிலுள்ள பழமைப் பெறுமதிவாய்ந்த பரம்பரை சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நிறுவனத்தின் நூலகத்திற்காக நன்கொடையொன்றாக துணைக் கருவிகளுடன் டெக்ஸ்டொப் கணனி ஒன்று மற்றும் ஸ்கேனர் இயந்திரமொன்று கிடைத்திருந்ததுடன் அப் பண்டங்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்து மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உட்டுபத்தியிருக்கவில்லை.

(ஆ) கணித்தல் தவறின் காரணமாக மீளாய்வாண்டிற்காக நிலையான வைப்புக்களின் வட்டி வருமானம் மற்றும் பெறவேண்டிய வட்டி ரூபா 36,626 இனால் மிகையாகக் காட்டியிருந்தது.

(இ) நிலையத்தினால் 1998 ஆம் ஆண்டின் போது ஜே.ஆர். ஜயவர்தன தகவல் நிலையம் எனும் தனியார் கம்பனி ஒன்றில் செய்யப்பட்டிருந்த முதலீடு ஒன்று என மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ரூபா 4.3 மில்லியன் தொகை காட்டப்பட்டிருந்ததுடன் 2008 ஆண்டின் போது இந்த நிறுவனத்தை மூடும் போது அவற்றின் சொத்துக்கள் ரூபா 61,500 இற்கான பெறுமதி கணிக்கப்பட்டிருந்தது. நிறுவனம் மூடப்பட்டு 8 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அந்த அறவிடப்பட முடியாத மீதி மற்றும் சொத்துக்கள் தொடர்பாக கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2016 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ஒதுக்கம் மற்றும் தடுத்து வைத்த இலாப மீதி ரூபா 33,759,354 தொகை எனினும் அதனை ரூபா 33,871,339 தொகை என முன்கொண்டு சென்றிருந்தமையால் தடுத்து வைத்திருந்த இலாபம் ரூபா 111,985 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு அரச நிறுவனங்களுக்கு மற்றும் மூன்று ஆட்களுக்கு வாடகைக்கு கொடுத்திருந்த கட்டிடங்களில் இருந்து முறையே ரூபா 479,600 தொகை மற்றும் ரூபா 1,845,108 தொகை 2 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) பல வருட காலமாக முன்கொண்டுவரப்படும் கூட்டுத்தொகை ரூபா 93,184 தொகைக்கான 03 வரவு மீதிகளை மற்றும் 03 செலவு மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள்விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 இன் 77 ஆம் இலக்க ஜே.ஆர்.ஜயவர்தன நிலையச் சட்டத்தின் 4(1)(ஈ) ஆம் பிரிவு | சட்டத்தின் பிரகாரம் செவிமடுத்தல் மற்றும் சாட்சி சார்ந்த டேப் படிகளை பாதுகாத்தல் மற்றும் பேணல் நிறுவனத்தின் பொறுப்பு ஒன்று ஆயினும் இவ் அறிக்கைத் திகதி வரை இந்த பொருட்கள் டிஜிடல் தொழில் நுட்பத்திற்கு மாற்றி அல்லது பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக்கோவையின் | |
| | நிதிப் பிரமாணங்கள் 756 மற்றும் 2016 திசெம்பர் 16 ஆம் திகதி பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 05/2016 | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வருடாந்த கணிப்பீடு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. அத்துடன் பண்டக் கணிப்பீட்டு சபை ஒன்றும் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2006 பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 5.3.11 ஆம் பிரிவு | தேசிய போட்டி அடிப்படையில் விலைகூறல்களின் அழைத்த கூறுவிலை தாரர்களினதும் குறிப்பிட்ட விண்ணப்பப்பத்திரம் விலைகூறல் பாதுகாப்பு ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டு பாதுகாப்பு சேவை வழங்குவதாகவும் ரூபா 1,537,239 தொகைக்கான பெறுகைகளின் போது நிறுவனத்தினால் விலைகூறல் பாதுகாப்பு ஒன்றினை பெற்றிருக்கவில்லை. |
| (ஈ) | 2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவுகள் 4.2.2 மற்றும் 4.2.3(அ)(ஆ) | மாதாந்த நிதிக்கூற்றுக்கள் அனைத்து மாதங்களிலும் நிருவாக சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் 06 மாதங்களுக்கு ஒரு முறை செயலாற்றுகை தொடர்பாக கலந்துரையாடல் மற்றும் அதன் அறிக்கை பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், 2015 திசெம்பர் 09 திகதியின் பின்னர் மீளாய்வாண்டின் போது நிலையத்தின் நிருவாக சபைக் கூட்டங்கள் ஏதும் நடத்தப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2015 மே 25 திகதிய பீஈடீ1/2015 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக தொழிநுட்ப உதவியாளர் மற்றும் மின்சார தொழிநுட்பவியலாளர் பதவிகள் வகிக்கும் இரண்டு ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது போக்குவரத்து செலவுகள் என ரூபா 89,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பெற வேண்டிய வட்டி வருமானத்தினுள் காட்டப்பட்டிருந்த ரூபா 9,397 தொகை மற்றும் செலுத்த வேண்டியது என காட்டப்பட்டிருந்த ரூபா 187,363 இற்கான இனங்காணப்படாத மீதிகள் முறையான அங்கீகாரம் இன்றி நாள்வழிக் குறிப்புகளின் மூலம் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிலையத்தின் செயற்பாடுகளின் மூலம் ரூபா 2,510,103 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,384,454 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 5,894,557 இற்கான வளர்ச்சி ஒன்று

அவதானிக்கப்பட்டது. 2016 ஆண்டின் போது கட்டிட வாடகை வருமானம் ரூபா 3,030,549 இனால் மண்டபம் ஒதுக்கும் கட்டணம் ரூபா 1,687,477 இனால் மற்றும் நிலையான வைப்புக்களுக்கான வட்டி ரூபா 1,008,442 இனால் அதிகரித்தல் மேற்கூறிய வளர்ச்சிக்கு முக்கியமாக பாதித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 வருடங்களில் நிதி விளைவுகளில் கவனம் செலுத்தும் போது 2012 மற்றும் 2013 ஆண்டுகளின் போது மிகையொன்றாகக் காணப்பட்ட போதிலும் 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது பற்றாக்குறையொன்று மீண்டும் மீளாய்வாண்டின் போது மிகை ஒன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம், அரசாங்க வரிகள் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் செய்த போது நிலையத்தின் பங்களிப்பு இடையறாது அனுகூலமான நிலைமை ஒன்று காட்டப்பட்டிருந்ததுடன் 2012 ஆண்டின் போது ரூபா 12,092,793 தொகைக்கான பங்களிப்பு 2016 ஆண்டின் போது ரூபா 20,568,938 தொகை வரை வளர்ச்சியடைந்திருந்தது.

### 3.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

நிலையத்தின் தொழிற்படு மூலதன முகாமைத்துவம் மீது கவனம் செலுத்தும் போது முன்னைய ஆண்டின் போது 5.8:1 தொகையான நடைமுறை சொத்துக்கள் விகிதாசாரம் மீளாய்வாண்டின் போது 7.3:1 தொகையாகக் காணப்பட்டதுடன் விரைவுச் சொத்து விகிதாசாரங்கள் 7.1:1 தொகையும் காணப்பட்டது. நடைமுறை சொத்துக்களுள் 82 சதவீதம் தொகை குறுகிய கால முதலீடுகளின் மூலம் பிரதிநிதிப்படுத்தியது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

முன்னைய ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜயவர்தன அவர்களின் ஆவணங்கள், கோவைகள், ஞாபகச் சின்னங்கள், கிடைத்த நன்கொடை வெகுமதிகளை வைப்புச் செய்தல், அவற்றின் பாதுகாப்பு மற்றும் பேணல் காட்சிப்படுத்தல், வளவாளர் கூட்டங்கள் நடாத்துதல், அரச காப்பகத்திற்கு அனைத்து அறிக்கைகள் மற்றும் அச்சுப் பண்டங்கள் வைத்திருத்தல் ஆகியவை நிலையத்தின் பிரதான குறிக்கோளாக காணப்பட்டதுடன் அந்த குறிக்கோள்களை நிறைவேற்றுவது தொடர்பாக நிலையத்தின் செயலாற்றுகை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 18,854,500 தொகை செலவிடப்பட்டு நிறைவேற்றுவதற்கு திட்டமிட்டிருந்த 30 விடயங்களில் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 16,714,500 தொகைக்கான 22 விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

(ஆ) 2015 ஆண்டின் போது மூலிகை நாட்டு மேடையொன்று மற்றும் புதிய வாகனம் நிறுத்தி வைக்கும் இடம் என்பன ஆரம்பிப்பதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் அவ் விடயங்கள் நிவேற்ற இயலாது போனமையால் அவை 2016 ஆண்டின் போதும் மீண்டும் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2016 ஆண்டின் போது அவ் விடயங்களை பூர்த்தி செய்வதற்கு நிலையத்திற்கு முடியாதிருந்தது.

(இ) நிறுவனத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்படாத விடயங்கள் அனேகமானவை நிறைவேற்றப்படாமைக்கான காரணமாக நிதிச் சிக்கல்கள் காட்டப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் நிறுவனத்தினால் வருடாந்த திட்டங்கள் தயாரித்தலின் பலவீனங்கள் காணப்படுகின்றன என அவதானிக்கப்பட்டது.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆண்டிற்கான கட்டிட வாடகை வருமானம் என ரூபா 16,364,597 தொகை இனங்கண்டிருந்ததுடன் கட்டிடங்களை வாடகைக்கு வழங்கும் போது பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் மாதாந்த வாடகை அறிக்கை ஒன்று பெற்றுக்கொள்ளாமல் பல்வேறு மாதாந்த வாடகையின் கீழ் கட்டிடங்களை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவனத்தினால் விரிவுரை மண்டப வசதிகள் வழங்குதல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) விரிவுரை மண்டப வசதிகள் வழங்குதல் தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளத் தவறும் எச் சந்தர்ப்பத்திலும் உடன்படிக்கை இரத்துச் செய்யும் உரிமை நிலையத்திற்கு இருந்தது. எனினும் உடன்படிக்கையை புறக்கணித்த விரிவுரையாளர் ஒருவரின் உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் இடையறாமல் விரிவுரை மண்டப வசதிகள் வழங்கியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,104,216 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ii) உடன்படிக்கையின் பிரகாரம் மாணவர்களுக்கு விரிவுரை நடத்துவதற்கு மாத்திரம் இந்த விரிவுரை மண்டபத்தின் வசதிகளை பயன்படுத்த வேண்டுமெனினும், அதற்கு முரணாக ஒரு விரிவுரையாளரினால் வேறு 08 விரிவுரையாளருக்கு நிலையத்தின் அங்கீகாரம் இன்றி விரிவுரை மண்டப வசதிகளை வழங்கி நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானங்களை இழக்கச் செய்துள்ளது.

(இ) நிலையத்தின் நூலகத்தில் விற்பனை செய்வதற்காக ரூபா 471,500 தொகை பெறுமதியான 05 வெளியீடுகளின் 2500 பிரதிகள் அச்சிடுவதற்காக 2013 திசெம்பர் 18 திகதி அரச அச்சகத் திணைக்களத்திற்கு ரூபா 264,040 தொகை முற்பணமொன்று செலுத்தப்பட்டிருந்தது. இவ்வறிக்கை திகதி வரை இந்த வெளியீடுகளில் 04 வெளியீடுகள் அச்சிட்டு நிறுவனத்திற்கு ஒப்படைக்காமை தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இடிமுழக்கத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட நிலையத்தின் புகைப்பட முறைமையை திருத்துவதற்காக ரூபா 340,500 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் காப்புறுதி நிறுவனத்தினால் மீளளிப்பு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 192,375 தொகையாகக் காணப்பட்டமையால் நிலையத்தின் ரூபா 148,125 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. காப்பறுதிப் பாதுகாப்பு பெற்றுக்கொள்ளும் போது பொருத்தப்பட வேண்டிய இடி தடுத்தல் கருவி ஒன்று பொருத்தப்படாமையினால் இந்த நட்டத்தை அடைய நேரிட்டிருந்தது.

(உ) 1988 இன் 77 ஆம் இலக்க ஜே.ஆர்.ஜயவர்தன நிலையச் சட்டத்தின் (3) ஆம் பந்தியின் பிரகாரம் குடியரசின் ஜனாதிபதி, உயிருடன் இருக்கும் முன்னைய ஜனாதிபதிகள், பிரதமர், சபாநாயகர், எதிர்கட்சித் தலைவர், ஜனாதிபதி செயலாளர், தேசிய காப்பக பணிப்பாளர் மற்றும் ஜனாதிபதியினால் நியமனம் செய்யப்படும் இரண்டு அங்கத்தரவர்களினை நிருவாக சபை கொண்டிருக்கின்றது. மேற்கூறிய நபர்களை சேகரித்து நிருவாக சபையின் கூட்டம் கூடுதல் செயற்பாட்டு ரீதியில் இயலாமையினால் மற்றும் நிருவாக சபையின் அங்கீகாரம் இன்றி கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றனமையினால் நிருவாக சபையின் கூட்டங்களை முறைப்பிரகாரம் நடத்துவதற்கு முடியுமான விதத்தில் சட்டத்தை திருத்தி அமைத்தல் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தனியார் வங்கி ஒன்றில் சேமிப்பு வைப்பு ஒன்றில் ரூபா 219,141 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நிலையத்தின் நலன்புரி சங்கத்தினால் நடத்தப்படும் சிற்றுண்டிச் சாலைக்காக அங்கீகாரம் ஒன்று இன்றி சமையல்காரர்கள், உதவி சமையல்காரர்கள், தொழிலாளர்கள் என மூவர் சேர்க்கப்பட்டு நிறுவனத்தின் நிதியத்தில் இருந்து 2016 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 2,575,975 இற்கான சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

2013 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று 2014 அக்தோபர் 21 திகதியின் பின்னர் பயன்படுத்தியிருக்கவில்லை. அத்துடன் அதற்காக வருடத்திற்கான காப்புறுதி கட்டணம், வருமான அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் வருடாந்த புகைப் பரிசோதனை கட்டணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 20,116 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 4.5 பதவியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் அத்தியாயத்தின் பிரிவுகள் (அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் நிலையத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி ஒன்றுடன் அமைப்பு வரைபடமொன்று காணப்படாததுடன் 30 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தியிருந்தனர்.

(ஆ) மேற்கூறிய சுற்றறிக்கையின் பிரிவு 9.3.1(அ) பிரிவின் பிரகாரம் நிலையத்தினால் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அரச முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கத்துடன் நிருவாக சபையின் மற்றும் குறிப்பிட்ட அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

(இ) நூலகத்தில் இணைந்து 07 நிரந்தர ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டிருக்கும் போது 2014 நவம்பர் 12 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கையின் 07 ஆம் பிரிவிற்கு முரணாக செயலாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் மீது 2016 ஆண்டின் போது நூலகப் பயிலுனர்கள் என 08 பேர்கள் சேர்க்கப்பட்டு ரூபா 241,900 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு சேர்க்கப்பட்டிருந்த இரண்டு சாரதிகளின் படிகள் தொடர்பாக கவனம் செலுத்திய போது சம்பள முரண்பாடு ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் ஒரு உத்தியோகத்தருக்கு 2013 ஜூலை 01 ஆம் திகதி முதல் 2016 திசெம்பர் 31 வரை ரூபா 27,300 தொகை குறைவாக சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 இலக்க சுற்றறிக்கையின் 5.2 பந்தியின் படிவத்தின் பிரகாரம் பாதீடு தயாரித்திருக்கவில்லை. பாதீட்டு செலவுகள் மற்றும் உள்ளவாறான செலவுகள் இடையே 18 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக்கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2009 ஜூன் 09 ஆம் திகதிய டீஎம்ஏ 2009(i) இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தினால் நிதி விடயங்கள் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடு ஒன்றினை ஏற்படுத்துவதற்காகவும் அவ் விடயங்களின் தவறுகள் மற்றும் மோசடிகளை தவிர்ப்பதற்காக மற்றும் வெளிப்படுத்துவதற்கு சுதந்திரமாக மதிப்பீடு ஒன்று நடத்துவதற்காகவும் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட வேண்டுமெனினும் நிலையத்திற்காக உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 5.3 வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2003 ஜூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுள் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் 2011 ஆண்டின் பின்னர் நிலையத்தின் வருடாந்த அறிக்கை இவ்வறிக்கை தினம் வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறைபாடுகள் அவ்வப்போது நிலையத்தின் செயலாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) வருமான நிருவாகம் | (i) பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளாமை மற்றும் வாடகை உடன்படிக்கை முறைப்படி செயற்படாமை. |
| | (ii) பணம் பெறுவதற்காக காணப்பட்ட கணனி முறைமையில் மற்றும் பணம் சேகரிப்பில் தாமதம் காணப்படல் |
| (ஆ) நூலக நிருவாகம் | நூலகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டில் பலவீனங்கள் காணப்படல். |

| | | |
|---|---|---|
| (இ) | உசாத்துணை சேவை கொடுப்பனவு கட்டுப்பாடு | முறையான உடன்படிக்கை இன்றி உசாத்துணை சேவைகள் பெற்றுக்கொள்ளல். |
| (ஈ) | பெறுகைகள் கட்டுப்பாடு | பெறுகைகள் வழிகாட்டல் கோவையில் ஏற்பாடுகள் கடைபிடிக்காமை. |
| (உ) | பதவியணியின் நிருவாகம் | ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவியணிகளுக்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமை. |